# அத்தியாயம் - 11

## சுற்றுச்சூழல்

### அ. முன்னுரை

சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு நீடித்த நிலையான நகரங்கள் அடிப்படையானவை. தேசிய திட்டக் குழுவின் பத்தாவது திட்ட ஆவணத்தில் கூறியுள்ளபடி நீடித்த நிலையான வளர்ச்சித்தேவை ஒரு விருப்பம் மட்டுமல்லாது கட்டாயமாக செயல் படுத்தப்பட வேண்டிய ஒன்று. நல்ல சுத்தமான காற்று, சுத்தமான நீர், சத்துள்ள உணவு, ஆரோக்கியமான சூழ்நிலை மற்றும் நம்மைச் சுற்றிலும் பசுமையானசூழல் ஆகியன நன்றாக வாழ்வதற்குரிய ஒரு நல்ல சூழலுக்குத் தேவையான நீடித்த நிலையான வளர்ச்சி தேவை, சுற்றுச்சூழல் சீரழிவும், பொருளாதார வீழ்ச்சியும் ஒன்றுக்கொன்று துணைபுரிந்து, வறுமை, மாசு, மோசமான சுகாதாரம் அரசியலில் பயங்கரமான மாற்றங்கள் மற்றும் அமைதியின்மைக்கு வழிகோலும். சுற்றுச்சூழலை ஒரு தனிப்பட்ட பிரச்சனையாகக் கருதக்கூடாது. வளர்ச்சியின் எல்லாவகையான கூறுகளிலும் அது மாறுதல் ஏற்படுத்துகின்றது. நாம் நம் பொருளாதார வளர்ச்சி விகிதத்தை உயர்த்தி மக்கள் தொகையில் பெரும் பிரிவினருக்கு உயிர் வாழ்வதற்கான குறைந்தபட்ச அடிப்படை உதவியளித்து வேலையில்லாத் திண்டாட்டத்தையும், வறுமை முதலிய பிரச்சனைகளையும் சமாளிக்க வேண்டும். அதே சமயம் நம்முடைய இயற்கை வளங்களைப் பாதுகாப்பதிலும் சுற்றுச்சூழலின் தரத்தை மேம்படுத்துவதிலும் கவனம் செலுத்தவேண்டும்.

**11.2** நகரமயமாதலினால் ஏற்படும் பாதிப்புகளால் சுற்றுச்சூழல் மாசுபடுவது தேவையான அல்லது தப்பிக்க முடியாத ஒன்றல்ல. சுற்றுச்சூழலுக்கான வாய்ப்புகளையும், கட்டுப்பாடுகளையும், ஒன்றுக்கொன்று பொருத்தி, வளர்ச்சிகளை ஏற்படுத்தி, சுற்றுசூழலில் ஒரு சரி நிகரான நிலையை ஏற்படுத்த வேண்டும்.

**11.3** பெருநகரச் சுற்றுச்சூழல் இரண்டு அம்சங்களைக் கொண்டுள்ளது. அதாவது (i) சுற்றுச்சூழல் (ii) உறைவிடம். சுற்றுச்சூழலானது, உள்ளபடியே இயற்கைக்கூறுகள் மற்றும் காற்று, இரைச்சல், நீர் மற்றும் நிலம் (திறந்தவெளி, காடுகள் போன்றவை) போன்ற வளங்களுடன் தொடர்புடையது. நீர் வழங்கீடு, கழிவுநீர் மற்றும் திடக்கழிவு அகற்றல் போன்ற கட்டப்பட்ட சூழல் மற்றும் உள்கட்டமைப்பு போன்றவற்றுடன் உறைவிடம் தொடர்புடையது. இயற்கை வளங்களைப் பாதுகாப்பது / இயற்கைக் காற்று, இரைச்சல், நீர் மற்றும் நிலம் ஆகியவற்றான மேலாண்மையை /உள்ளடக்கியதாகும்.

### ஆ. தற்போதைய நிலை :

**11.4** மில்லினியம் வளர்ச்சி ஏழு குறிக்கோள்களில், முதன்மையான குறிக்கோள் “சுற்றுப்புற சுகாதாரத்தை நிலைநிறுத்த உறுதிசெய்வது” ஆகும். கடந்த சில வருடங்களாக, சென்னைப் பெருநகர்ப் பகுதியில், சுற்றுப்புற சுகாதாரத்தை நிலைநிறுத்தி அபிவிருத்தி செய்வது முன்னுரிமை அளிக்கப்பட்டு வருகிறது.

### நீர்வழிகளில் தூய்மைக்கேடு

**11.5** ஆறு, நீர்வழிகள் மற்றும் கால்வாய்கள் மிகவும் தூய்மைகேடு அடைந்துள்ளது என்பது தெள்ளத்தெளிவாகவும், கண்கூடாகவும் தெரிகிறது. அவைகள், கூவம் ஆறு, அடையாறு, பக்கிங்காம் கால்வாய், கேப்டன் காட்டன் கால்வாய், ஒட்டேரி நல்லா மற்றும் மாம்பலம் கால்வாய் ஆகும். இக்கால்வாய்கள் வழியாக, தினசரி **532** மில்லியன் லிட்டர் கழிவுநீர் செல்கிறது. இந்தக் கழிவுநீரானது, சென்னைப் பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு, சுத்திகரிப்பிற்காக சென்னை நகரத்திலிருந்து எடுத்துச் செல்லப்படும் கழிவு நீரைவிட அதிகமாகும். சென்னையின் நீர் வழிகள், ஆண்டு முழுவதும் நீர்பாய்பவை அல்ல. பருவகாலத்தில் உண்டாகும் மழைநீர் வெள்ளத்தால் மட்டுமே நீர்வழிகள் நீரைப்பெறுகின்றன. ஆண்டில், மற்ற காலங்களில், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்தால் வெளியேற்றப்படும் கழிவுநீரை மற்றும் குறையுள்ள மழைநீர் வெளியேற்றும் பாதைகளிலுள்ள குறைபாட்டால் கசியும் கழிவுநீரையும் சுமந்து செல்லுகிறது.

**11.6** மினாஸ் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு மாசுக் கட்டுபாட்டு வாரியமானது குறிப்பிட்ட இடைவெளிகளில் நகரில் நீர்வழிகளின் நீரின் தரத்தைக் கண்காணிக்கிறது. ஒவ்வொரு மாதமும் தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாட்டு வாரியம் பக்கிங்உறாம் கால்வாய் (வடக்கு, மத்திய, தெற்கு பரப்பில்) அடையாறு, கூவம் ஆற்றிலிருந்து மாதிரி நீரை எடுத்து ஆராய்ச்சி செய்கிறது. மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின்படி, நகரத்தின் இந்த எல்லா நீர் நிலைகளின் நீரும் மாசுபட்டுள்ளன. வேறு எந்தக் குறிப்பிட்ட பயன்பாடுகளுக்கு (குடிக்கவும், குளிக்கவும், கால்நடை வளர்ப்புக்கும், மீன்வள மேம்பாட்டிற்கும், தொழிற்சாலைக்கும், உணவு சமைக்கவும், சுத்தம் செய்யவும், வேளாண்மைக்கும்) உகந்தது அல்ல. மாசு, பக்கிங்உறாம் கால்வாயில் மிக அதிகமாகவும் அதை தொடர்ந்து ஒட்டேரி கால்வாய் மற்றும் கூவம் ஆற்றிலும் அதிகமாக உள்ளது.

**11.7** நீர் நிலைகளில் மாசு அடைவதாலும் மற்றும் நுண்ணுயிர் மூலம் சுத்தப்படுத்தப் படும் கழிவுநீர் நீர்நிலையில் விடப் படுவதாலும், சேறு நீர்நிலைகளில் தேங்கி, திரவ நீரோட்டத்திற்கு தடை ஏற்படுவதால், சுற்றுச் சூழலில் நீர் மாசு அடைகிறது என்பதை 1994 ல் மாட் மேக் டோனால்ட் கலந்தாலோசகரால் நடத்தப்பட்ட சேறு அகற்றும் கலந்தாலோசனை ஆய்வு தெரிவிக்கிறது.

**காற்றில் தூய்மைக்கேடு**

**11.8** கண்பார்வைக்கு புலப்படாமல், காற்றில் தூய்மைக்கேடு அடைவது மிகவும் ஆபத்தான ஒன்று. அதிகபட்சம் 71.28 சதவீதம் வாகனங்களால் மாசுபடுகிறது. அதனைத் தொடர்ந்து தொழிற்சாலை மூலமாக 19.70 சதவீதம் மாசுபடுகிறது. தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அறிக்கையின்படி, முக்கியமான போக்குவரத்து சந்திப்புகளில் TSPM மற்றும் RSPM-ன் அளவானது, திட்ட அளவைவிட கூடுதலாக உள்ளது. தொழிற்சாலைகளால் ஏற்படும் மாசு எங்கும் வியாபித்திருக்கிறது. மணலி தொழிற்சாலை வளாகம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள இடங்கள் மாசு அடைந்துள்ளன. தொழிற்சாலைப் பகுதிகளில் வருடச் சராசரி மாசு சல்பர் டை ஆக்சைடு மற்றும் நைட்ரஜன் ஆக்சைடு ஆகும். இதில் RSPM மற்றும் TSPM-ன் அளவுகள் ஏற்றுக்கொள்ளும் அளவிற்கு மேலாக உள்ளன.

**நகர திடக்கழிவினால் தூய்மைக்கேடு**

**11.9** நகரங்களில் வெளியேற்றப்படும் கழிவுப்பொருள்கள், திடக்கழிவுகள், உயிரிய மருத்துவக் கழிவுப் பொருள்கள், ஊறுவிளைவிக்கக்கூடிய தொழிற்சாலைக் கழிவுகள் போன்றவைகள் முக்கிய பிரச்சனைகளாக உள்ளது. மாநகராட்சி திடக்கழிவு கொட்டுமிடங்களான கொடுங்கையூர் மற்றும் பெருங்குடி ஆகியவற்றில் குப்பைகளை எரிப்பதனால் ஏற்படும் புகை மற்றும் இவை ஏற்படுத்தும் நச்சு வாயு ஆகியவைகளால் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சுற்றுச்சூழல் கேடு ஏற்படுகிறது.

**11.10** சமீபத்தில் மாசு சம்பந்தமாக கண்டறியப்பட்ட பிரச்சனைகளில் ஒன்று, மக்காத பிளாஸ்டிக் குப்பைகளாகும். குப்பை சேகரிக்கும் இடத்திலேயே பிரித்தெடுத்தல், பயனீட்டாளர் மற்றும் பொது மக்களின் விழிப்புணர்வை உயர்த்துதல், பொது இடங்களில் குப்பை போடுவதற்கு அபராதமிடுதல், மறு சுழற்சிக்கு பிளாஸ்டிக் பைகளின் குறைந்தபட்ச திண்மையை அறுதியிட்டுக் குறிப்பிடுதல் போன்ற தடுக்கக் கூடிய, குறைக்கக் கூடிய மற்றும் நிறைவேற்றக் கூடிய அம்சங்களை, உரிய துறைகள் / நிறுவனங்கள் இப்பிரச்சனைகளை கையாள கருத வேண்டும்.

**இரைச்சல் மாசு:**

**11.11** தமிழ்நாடு மாசுக் கட்டுபாடு வாரியத்தின் மதிப்பீட்டின்படி, இரைச்சல் மட்ட மளவு முக்கியமாக வணிக இடங்களில் போக்குவரத்தால் வரம்பைக் கடந்துவிட்டது என்று தெரிகிறது. சென்னையில் விழாக் காலங்களில் இரைச்சல் மட்ட அளவு உயர்ந்து இருப்பதாகவும், முக்கியமாகத் தீபாவளி சமயத்தில் 120 டெஸிபெல்லைத் தாண்டுவதாகவும் கண்டறியப்பட்டுள்ளது.

**சுற்றுச்சூழல் மகத்துவம் வாய்ந்தப் பகுதிகள்:**

**11.12** சென்னை இயற்கை மற்றும் செயற்கை வளங்கள் நிறைந்த சுற்றுச் சூழலைக் கொண்ட பகுதியாகும். நகர்ப்பகுதிகளில் இவை அபூர்வமான ஒன்று. நீண்ட அகலமான மணற்பரப்புடைய கடற்கரை,

பழங்கால மெரினா கடற்கரை, நஞ்சை நிலங்கள் மற்றும் நதி முகத்துவாரங்கள், குன்றுகள் நிறைந்த காடுகள் போன்றவை இவற்றில் அடங்கும். கிண்டி தேசிய பூங்காவும் மற்றும் வண்டலூார் உயிரியல் பூங்காவும் நகரப் பகுதிக்கு தனித்தன்மை வாய்ந்ததாக விளங்குகிறது. மனிதனால் உருவாக்கப்பட்ட நீர்த்தேக்கங்களான, நகர குடிநீர்தேக்கங்கள், விவசாயத்திற்கான குடிநீர்தேக்கங்கள், ஆங்காங்கே உள்ள விவசாய நிலங்கள், நல்ல நீர் ஆதாரப்பகுதிகள் போன்றவை சென்னைப் பெருநகர்ப் பகுதிக்கு அதிக மகத்துவம் தருபவையாகும். சென்னைப் பெருநகர்ப்பகுதியின் சுற்றுவட்டாரத்திலுள்ள, வடபகுதியில் அமைந்துள்ள புலிக்காட் ஏரி, வடமேற்குப்பகுதியில் அமைந்துள்ள நகரி குன்றுப்பகுதிகள் மற்றும் தெற்கில் அமைந்துள்ள முட்டுக்காடு ஆகியவை மிகவும் சிறப்பு வாய்ந்தவைகள். இம்மாதிரியான சிறப்பு அம்சமுடைய பகுதிகள் உள்நாட்டில் உள்ள பறவைகள் மற்றும் இடம்பெயர்ந்துவரும் பறவைகள், கடல் ஆமைகள் மற்றும் இதர விலங்கினங்களுக்கு வாழ்விடமாக அமைகிறது.

**பசுமைப் பகுதிகள்**

**11.13** சென்னைப் நகரில், அறிவிக்கப்பட்ட பூங்காக்களாக 2 சதவீத பகுதிகள் மட்டுமே உள்ளது. சென்னை பெருநகர்ப் பகுதியில் அறிவிக்கப்பட்ட மொத்த வனப்பரப்பு 24 சதுர கீலோ மீட்டராகும். இது சென்னை பெருநகர்ப் பகுதியில் 2 சதவீகிதமாக உள்ளது. சாலையோரம் மற்றும் மனையிடங்களில் உள்ள மரங்களினால் பெருநகரில் பசுமைப்பரப்பு கணிசமான அளவில் உள்ளதாகக் வானிலிருந்து எடுக்கப்படும் படங்கள் காட்டுகிறது. சென்னைப் பெருநகரப் பகுதியிலும் அதன் பிறபகுதிகளிலும் குறிப்பாகச் சாலையோரங்கள், வடிகால்கள் மற்றும் ஆற்றங்கரைகள் போன்றவற்றில் பசுமைப்பரப்பைப் பெருக்க வாய்ப்புள்ளது.

**தட்பவெப்ப நிலையில் மாற்றம்**

**11.14** கோளத்தின் வெப்பம் அதிகரித்தலானது, தட்பவெப்ப நிலையில் மாற்றம், மழையளவுகளின் தன்மை மாறுதல் மற்றும் சூறாவளி காற்றின் பாதிப்பு ஆகியவற்றால் கடற்கரை ஓரம் மட்டுமல்லாமல் உட்பகுதியில் வாழும் கோடிக்கணக்கான மக்கள் வாழ்க்கையை அச்சுறுத்துகிறது.

**11.15** சென்னையானது, கடற்கரையை ஒட்டியுள்ள சமமான பகுதியாகும். வடகிழக்கு பருவமழை காலங்களில், சூறாவளிக்காற்று திடீர் தாக்குதல் மற்றும் அதனால் வெள்ளப் பெருக்கு, ஒரு வாடிக்கையாகவுள்ளது. தட்பவெப்ப மாற்றத்தால் ஏற்படும் தாக்கத்தை திட்டமிட்டு கையாளும் முறைகளை கருத்தில் கொள்வது அவசியமான ஒன்று. இதைப்பற்றி அறிந்துகொள்வது சமீபத்திய காலங்களில் முக்கியத்துவம் பெறுகிறது. நகர்ப்புற பயன்பாடுகளால் ஏற்படும் நச்சு வாயு வெளியீட்டை நீக்குவதோடு மட்டுமல்லாமல், எதிர்பாக்கப்பட்ட தட்பவெப்ப மாற்றத்தால் பொருளாதாரம் மற்றும் மக்களின் வாழ்கையில் ஏற்படுத்தப்படும் தாக்கத்தை குறைக்க நிவாரண முறைகளை கண்டறிய, தற்கால தகவல்கள் மற்றும் தொழில் நுட்பங்களை அறிந்து கொள்ளுதல் அவசியமாகிறது.

**சுடுகாடுகள்:**

**11.16** சென்னை மாநகராட்சியில் 29 மரபுவழி இடுகாடு/ சுடுகாடு மற்றும் 4 மின்சார சுடுகாடுகள் பராமரிக்கப்பட்டுவருகின்றன. மரபுவழி சார்ந்த சுடுகாடுகள் மற்றும் இடுகாடுகளில் அதிக இடமும், எரிகட்டைகளும் உடல்களை எரிக்கத்தேவைப்படுகின்றன. மரபுவழி சார்ந்த முறை அருகாமையிலுள்ள மரங்களையும், சூழலையும் வெறுமையாக்குவதோடல்லாமல் காற்றையும் மாசுபடுத்துகிறது.

**சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் திட்டங்கள்:**

**11.17** சென்னையில் நீடித்த நிலையான திட்டத்தின் தொடராக, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமமானது, சமுதாய அடிப்படையிலான சுற்றுப்புறச் சூழல் மேம்பாட்டுத்திட்டம் நிறைவேற்றிவருகிறது. இதனுடைய முக்கிய நோக்கம் என்னவென்றால், நகர்ப்புற அபிவிருத்தியை நிலைநிறுத்துவது மட்டுமல்லாமல், பொதுமக்களை பங்கெடுத்துக் கொள்ளவைப்பதும், குறிப்பாக சுற்றுப்புற பிரச்னைகளை தெரிந்து அவைகளை தெரியப்படுத்துவதும், செயல்படுத்தக்கூடிய திட்டங்களை தெரிந்தெடுத்தலும் மற்றும் திட்டங்கள் செயல்படுத்த மான்யத்தொகை அளிப்பதும் ஆகும். இத்திட்டங்களுக்கு சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம், திட்டமதிப்பீட்டில் 80 சதவீதம் மான்யம் அளிக்கிறது. இதில் உள்ளாட்சி நிறுவனங்களின்

பங்குத்தொகை 10 சதவீதமும் மீதி சமுதாயப்பங்களிப்பு 10 சதவீதமும் ஆகும். இத்திட்டத்தின் மூலம் ஒவ்வொரு உள்ளாட்சி நிறுவனமும், ஒவ்வொரு ஆண்டும் தற்போது அதிகபட்சம் ரூபாய் 15 இலட்சம் மான்யம் பெறுகிறது.

### இ. முதன்மை பங்கீட்டாளர்கள்

**11.18** சுற்றுப்புறச் சூழ்நிலை, ஒவ்வொன்று துறைகளிலுடனும் வலுவான தொடர்புடையது. அதனால் இதனைப் பாதுகாப்பது குடிமக்கள், குடியிருப்போர், தொழில் முனைவோர், இவர்கள் மட்டுமல்லாமல் ஏறக்குறைய எல்லா அரசு மற்றும் அரசு சாரா வளர்ச்சி நிறுவனங்களின் பொறுப்பாகும். மாசுவை கட்டுபடுத்துவதற்கும் மற்றும் குறைப்பதற்கும் திட்ட அளவுகளை தீர்மானித்து மேலாண்மை செய்வதற்கு நியமிக்கப்பட்ட தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டுவாரியம், உள்ளாட்சி நிறுவனங்கள், பொதுபணித்துறை, சுற்றுப்புறச்சூழல்துறை, தமிழ்நாடு அரசு மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஆகியவை முதன்மை பங்கீடுபாடு கொண்டோராவர்.

### ஈ. கொள்கைகளும் வரன்முறைதிறம்களும்

**11.19** பழுதில்லாத கொள்கைகளைக் கொண்டும் மற்றும் சக்திவாய்ந்த செயலாக்கத்தைக் கொண்டும், நிலம், காற்று, இரைச்சல் மற்றும் நீரில் உண்டாகும் சுற்றுப்புறச்சூழல் பிரச்சினைகளை சமாளிக்கப் பட வேண்டும் மற்றும் இயற்கை வளம் பாதுகாக்கப்பட வேண்டும்.

அ) சுற்றுச்சூழல் ஒன்றோடொன்று தொடர்புடைய பிரிவு மற்றும் தற்போதுள்ள பெரிய எண்ணிகையில் உள்ள பங்கீடுபாடு கொண்டோரை கருத்தில் கொண்டு, தமிழ்நாடு மாசு கட்டுப்பாட்டு வாரியம், எல்லாவகையான சுற்றுப்புறச் சூழல் கட்டுப்பாட்டிற்கும், ஒரு இணைப்பு நிறுவனமாக செயல்படவேண்டும்.

ஆ) தேசிய சுற்றுச்சூழல் கொள்கையின் தொடராக சென்னைக்கு ஒரு நீடித்த நிலையான சுற்றுச்சூழல் கொள்கை வகுக்கப்பட வேண்டும். இதில் வளங்களை திறன்பட பயன்படுத்துதல், செலவைக் குறைப்பது, மற்றும் மாசுபடுத்துபவருக்கு அபராதக் கட்டணம் போன்றவற்றிக்கான கொள்கைகளை உள்ளடக்கியதாக இருத்தல் வேண்டும்.

இ) சென்னைப் பெருநகர்ப் பகுதியை அபிவிருத்தி செய்யும் ஒவ்வொரு துறையிலும், சுற்றுப்புறச்சூழல் திட்டம் மற்றும் அபிவிருத்தி பிரிவுகள் உருவாக்கப்படவேண்டும்.

ஈ) வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் புகையை குறைப்பதற்கு பிரச்சாரங்கள் போர்க்கால அடிப்படையில் செய்யப்பட வேண்டும். இவற்றுடன் கடுமையாக அமுலாக்க பொது போக்குவரத்து வாகனங்களை அதிகரித்தல், தனியார் போக்குவரத்தை குறைத்தல் மற்றும் வாகனங்களில் இயற்கை எரிவாயு வாயுக்களைப் பயன்படுத்துதல் போன்றவை சேர்க்கப்பட வேண்டும்.

உ) சென்னை மாநகராட்சி மற்றும் இதர உள்ளாட்சி நிறுவனங்கள் பொது இடங்களில் அதிகப்படியான பொதுக்கழிப்பிடங்களை உருவாக்கவேண்டும். இத்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டபின், திறந்தவெளிகளில் மலம், சிறுநீர் கழிப்பதை கடுமையான நடவடிக்கையால் தடுப்பது அவசியம்.

ஊ) கடற்கரைப் பகுதி ஒழுங்குமுறை விதிகள் கடுமையாக அமுல்படுத்தப்படவேண்டும்.

எ) சென்னைப் பெருநகரப் பகுதிக்கு உட்பட்ட அனைத்து உள்ளாட்சி நிறுவனங்கள் மற்றும் அபிவிருத்தி செய்யும் நிறுவனங்கள், அவர்களுடைய பகுதிகளில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு மேம்பாடு மற்றும் செயலாக்கத்திற்கான நடவடிக்கைகளை அதிகப்படுத்தி, நீண்டகால திட்டங்கள் தயாரித்து, ஆண்டு திட்டங்கள் மூலம் திட்டங்கள் வகுத்து செயல்படுத்தவேண்டும்.

ஏ) சென்னையிலுள்ள நீர்வழிகளில், அடுத்த ஐந்து ஆண்டுகளில் மாசுத்தன்மையை ஏற்றுக்கொள்ளக்கூடிய தரத்திற்கு குறைக்கவேண்டும். விரும்பத்தக்க தரத்திற்கு படிப்படியாக உயர்த்துவதற்கு ஒரு முறை உருவாக்கப்பட வேண்டும்.

ஐ) கழிவுநீரை சுத்தப்படுத்தி மீண்டும் பயன்படுத்துவதை ஊக்கப்படுத்தவேண்டும்.

ஒ) அரசாங்கம் நெருக்கத்திற்கு வரிவிதிப்பதை ஆய்வு செய்யவேண்டும். அதே நேரத்தில், சுற்றுப்புற சூழல் மேம்பாட்டிற்கு வரிச்சலுகை அளிப்பதையும் ஆய்வு செய்யலாம்.

ஓ) வியாபாரிகள் மற்றும் பொதுமக்களின் ஆலோசனைகளைப் பெற்று, சில தெருக்களை நடைபாதையினருக்கு மட்டும் ஒதுக்குதல் மற்றும் சில குடியிருப்புப்பகுதிகளில் வாகனப் போக்குவரத்து இல்லாமல் இருத்தல் போன்ற இரைச்சலை குறைக்கும் வழிகளை வகுத்து செயலாக்கலாம்.

ஔ) விரிவான ஆய்வு மேற்கொண்டு பிரச்சனைக்குரிய இடங்கள், சுற்றுசூழ் மகத்துவம் வாய்ந்த பகுதிகள் ஆகியவற்றை இனங்கண்டு, அந்தந்த துறைகளினால் சுற்றுச்சூழல் மேம்பாட்டிற்கு செயல் படுத்த வேண்டிய உத்திகளை உத்தேசித்து சென்னைப் பெருநகரப் பகுதிக்கு, சுற்றுப்புறச்சூழல் மேலாண்மைத்திட்டம் தமிழ்நாடு மாசு கட்டுப்பாடு வாரியம் தயாரிக்க வேண்டும்.

அஅ) பசுமையான இடங்களை அதிகரிக்கும் பொருட்டு, அந்தந்த உள்ளாட்சி நிறுவனங்கள், மரம் நடும் திட்டத்தை தயாரித்து பொதுச்சாலைகளின் இருமருங்கிலும் மட்டுமல்லாமல் ஏனைய பொதுஇடங்களிலும், பொதுமக்கள் பங்களிப்புடன் செயல்படுத்த வேண்டும்.

ஆஆ) ஏற்கனவே அமைந்துள்ள பூங்காக்கள், விளையாட்டு மைதானங்களைப் பராமரித்தல் மற்றும் புதிய பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள் உருவாக்குதல் ஆகியவைகளுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட வேண்டும். சென்னைப் பெருநகர்ப் பகுதியில் பூங்காக்கள், மற்றும் விளையாட்டு மைதானங்களை திட்டமிட்டு அபிவிருத்தி செய்வதற்கு தற்போதுள்ள பூங்காக்கள் மற்றும் விளையாட்டுத் திடல்கள் பற்றி ஒரு தகவல் பெட்டகம் தயாரிக்கப்பட வேண்டும்.

இஇ) நீர்நிலைகளை உல்லாச பயனுக்கும் அபிவிருத்தி செய்யப்படலாம். இவை மூலமாக நீர்நிலைகள் பாதுகாக்கப்படுவது மட்டுமில்லாமல் வருமானத்தை பெருக்கி அவைகளை பராமரிக்க ஏதுவாக அமையும்.

ஈஈ) ஊக்குவிப்பு மற்றும் வளர்ச்சி விதி முறைகள் மூலம் பாரம்பரிய கட்டிடங்கள் பாதுகாத்து காக்கப் பட வேண்டும்.

**உ. திட்டம்**

**11.20** அ) தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம், சுற்றுச்சூழல் துறைக்கு ஒரு மத்திய நிறுவனமாக செயல்படலாம் என இத்திட்டம் பரிந்துரைக்கிறது.

ஆ) சுற்றுப்புறச் சூழ் ஊறுபாடுள்ள பகுதிகளை கண்டறிந்து அவற்றின் பராமரிப்பு மற்றும் பாதுகாத்தலை இத்திட்டம் பரிந்துரைக்கிறது. நன்மங்கலம் பாதுகாக்கப்பட்ட வனப்பகுதியாகும். சுற்றுப்புறச் சூழலில் அக்கறை உள்ள எல்லா வயதினரும் இயற்கை வள மதிப்பை சரியாக உணர்ந்து கொள்ளக்கூடிய பூங்காவாக இதனை அபிவிருத்தி செய்யலாம்.

இ) திட்டம், பொருளாதாரம், நிலப்பயன்பாடு, உறைவிடம், உள்கட்டமைப்பு, குறிப்பாக குடிநீர் வினியோகம், சுகாதாரம் மற்றும் வடிகால் திட்டம், போக்குவரத்து, திடக்கழிவு மேலாண்மை போன்ற பிரிவுகளுக்கு பிரத்யேக நடவடிக்கை எடுக்க பரிந்துரைக்கிறது

ஈ) நிலம், கட்டிடங்கள் அபிவிருத்தி செய்யும்போது பசுமையை அதிகரிப்பதற்கு, பசுமைக் கட்டிடங்களுக்கான அலகுகள் இத்திட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளன.

உ) பசுமையை அபிவிருத்தி செய்வது, பொது இடங்களிலும், தனியார் இடங்களிலும் மரம் வளர்ப்பது, மரங்களைப் பாதுகாத்து பல உயிரினம் வாழும் சுற்றுச்சூழலை மேம்படுத்துவது போன்றவற்றிற்கு பிரத்யோக செயல் திட்டங்கள் தயாரித்து அமலாக்கம் செய்வது போன்றவைகள் பசுமைத்திட்டத்தின் நோக்கமாகும்.

ஊ) பள்ளிக்கரணை சதுப்பு நிலம் போன்ற இயற்கை சொத்துகளை பாதுகாக்க திட்டத்தில் குறிக்கப்பட்டுள்ளது.

**எ. கண்காணிப்பு மற்றும் மறு ஆய்வு:**

**11.21** அரசு மற்றும் அரசு சார்பற்ற பங்களிப்பாளர்கள் மற்றும் வல்லுநர்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளை கொண்ட, சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின், "நிலப்பயன்பாடு மற்றும் சுற்றுப்புறச் சூழல் குழு" என்றழைக்கப்படும் ஒரு குழு அமைக்கப்பட்டு, அக்குழு, இந்தத் துறைகளில் செயல்படுத்த வேண்டிய கோட்பாடு மற்றும் வினைமுறைதிறம் ஆகியவற்றை கண்காணித்து இந்நோக்கத்திற்காக தேவைப்படும் ஆய்வுகளை தொடங்கி வைத்து மற்றும் தகவல்களை திரட்டும் பணியையும் மேற்கொள்ள அமைக்கப்படும். இக்குழு மூன்று மாதத்திற்கொரு முறை அல்லது எப்போதெல்லாம் தேவைப்படுகிறதோ அவ்வப்போது கூடி நடவடிக்கைகளை மேற்கொள்ளும். சம்பந்தப்பட்ட பங்களிப்பாளர்களுடன் கலந்தாலோசித்து, இப்பணிக்கான, விரிவான திட்டவட்ட விதிமுறைகளையும் வரையறைகளையும் தயாரிக்கும்.

**11.22** இக்குழு இத்துறையின் கீழ் பல்வேறு உப-பிரிவுகளுக்காக உருவாக்கப்பட உள்ள சிறப்பு பணிக் குழுக்களின் உதவியுடன் மேற்கூறப்பட்ட பணிகளைச் செய்யும்.